**சுருக்கம்**

சட்டப்பேரவை விதி 110–ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிக்கை – மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகள் – போதிய இடவசதி உள்ள பூங்காக்களில் திறந்தவெளி உடற்பயிற்சி கூடம் மற்றும் யோகா மையம் அமைத்தல் – அனுமதி அளித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2) துறை**

**அரசாணை (4ப) எண்.6** | **நாள் 03.09.2020**

சார்வரி, ஆவணி 18,
திருவள்ளுவராண்டு, 2051
படிக்கப்பட்டது:-

1. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.5060/2020/தி1, நாள் 08 .04.2020.

2. முதன்மை செயலாளர்/உறுப்பினர் செயலர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், அவர்களின் கடித ந.க.எண்.4153/Ps-1/20, நாள் 30.07.2020.

********

**ஆணை:–**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டப் பேரவை விதி 110–இன் கீழ் 19.03.2020 அன்று வெளியிட்ட அறிக்கையில் "மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் போதிய இடவசதி உள்ள பூங்காக்களில் திறந்தவெளி உடற்பயிற்சிக் கூடம் மற்றும் யோகா மையம் அமைக்கப்படும் என அறிவித்தார்.

2. இவ்வறிவிப்பிற்கிணங்க, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் அனுப்பியுள்ள செயற்குறிப்பில், நகர்புற இளைஞர்கள் மற்றும் அனைத்து வயதினரிடத்திலும் உடற்பயிற்சி பழக்கத்தினை ஊக்குவிக்கும் வகையிலும் உடல் நலத்திற்கு முக்கியத்துவம் அளித்து உடற்பயிற்சி வாயிலாக உடல் வலிமை மற்றும் யோகா பயிற்சியின் வாயிலாக மன வலிமையினை அதிகரிக்கும் வகையிலும் குறிப்பாக இளைஞர்களை விளையாட்டுத் துறையில் அதிக அளவில் பங்கேற்க செய்ய தேவையான வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுத்திட அனைத்து மாநகராட்சிகள், சிறப்புநிலை நகராட்சிகள், தேர்வுநிலை நகராட்சிகள், முதல்நிலை நகராட்சிகள் மற்றும் மாவட்ட தலை நகரங்களில் போதிய இடவசதி உள்ள மாநகராட்சி/நகராட்சிக்கு சொந்தமான இடங்கள், பூங்காக்கள் மற்றும் திறவிடங்கள் கண்டறியப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

3. மேலும், மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் கண்டறியப்பட்டுள்ள போதிய இடவசதி உள்ள 147 மாநகராட்சி/ நகராட்சிக்கு சொந்தமான பூங்காக்கள் மற்றும் திறவிடங்களில் 120 சதுர மீட்டர் பரப்பளவிற்கு குறைவில்லாத இடத்தில் யோகா மையக் கட்டிடங்கள் கட்டவும் 100 சதுர மீட்டர் பரப்பளவிற்கு குறைவில்லாத இடங்களில் திறந்த வெளி உடற்பயிற்சி கூடங்கள் அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார். மேலும் அவர் மைய கட்டிடங்கள் நல்ல காற்றோட்ட வசதியுடன் கூடியதாகவும், அனைத்து தரப்பு மக்களும் எளிதில் வந்து செல்லும் வகையிலும் பாகுபாடின்றி பயன்படுத்துவதுடன் திறந்தவெளி உடற்பயிற்சி கூடங்களில் உடற்பயிற்சி செய்வதற்கு தேவையான குறைந்த பட்சம் கீழ்காணும் உபகரணங்களுடன் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்:-

**(த.பி.பா)**

| SL. No | Equipment Name |
|---|---|
| 1. | Leg Press |
| 2. | Air Walker/Leg & Thigh Exerciser |
| 3. | Hip Twister |
| 4. | Double Spin |
| 5. | Shoulder Builder |
| 6. | Chest Press |
| 7. | Arm Wheel |
| 8. | Chin ups/Pull ups |
| 9. | Rowing Machine |
| 10. | Stair steper/Twister |

4. மேற்காணும் யோகா மையம் மற்றும் உடற்பயிற்சி கூடங்களை அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் ஒரே மாதிரியாக அமைத்து செயல்படுத்தும் விதமாக யோகா மையக் கட்டிடத்திற்கான மாதிரி வடிவமைப்பு, வரைபடம் மற்றும் திறந்தவெளி உடற்பயிற்சி கூடங்களில் பொருத்தப்படும் உபகரணங்களின் தரம் மற்றும் விவரக் குறியீடு (Specifications) முதலானவை நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளரால் வழங்கப்படும் என்றும், மேற்படி 147 இடங்களில் திறந்தவெளி உடற்பயிற்சி கூடங்கள் மற்றும் யோகா மையங்களை பொது நிறுவனங்கள், தனியார் பங்களிப்பு மற்றும் உள்ளாட்சி பொது நிதியினை பயன்படுத்தி ஒரே மாதிரியாக ஏற்படுத்திடவும் தொடர் பராமரிப்பு செய்யும் வகையில் செயல்படுத்திட தக்க ஆணை பிறப்பிக்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார். அதன் தொடர்ச்சியாக மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் போதிய இடவசதி உள்ள பகுதிகளில் திறந்தவெளி உடற்பயிற்சி கூடம் மற்றும் யோகா மையம் அமைக்க தேவையான இடத்தினை தேர்வு செய்து நகராட்சி நிர்வாக ஆணையர் அரசுக்கு அனுப்பியுள்ளார்.

5. முதன்மை செயலாளர்/உறுப்பினர் செயலர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், அவர்கள் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் மாநகராட்சி மற்றும் நகராட்சிக்கு சொந்தமான பூங்காக்களில் திறந்தவெளி உடற்பயிற்சி கூடங்கள் மற்றும் யோகா மையங்கள் அமைப்பதன் மூலம் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து தரப்பு மக்களும் ஆரோக்கியமான வாழ்க்கை வாழ பயனுள்ளதாக அமையும் என தெரிவித்துள்ளார்.

6. மேற்காணும் சூழ்நிலையில், நகராட்சி நிர்வாக ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலனை செய்தது. பரிசீலனைக்குப் பின், இச்செயற்குறிப்பினை ஏற்று கீழ்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது:-

I. நகர்புற இளைஞர்கள் மற்றும் அனைத்து வயதினரிடத்திலும் உடற்பயிற்சி பழக்கத்தினை ஊக்குவிக்கும் வகையிலும் உடல் நலத்திற்கு முக்கியத்துவம் அளித்து உடற்பயிற்சி வாயிலாக உடல் வலிமை மற்றும் யோகா பயிற்சியின் வாயிலாக மன வலிமையினை அதிகரிக்கும் வகையிலும் குறிப்பாக இளைஞர்களை விளையாட்டுத் துறையில் அதிக அளவில் பங்கேற்க செய்ய தேவையான வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுத்திட மாநகராட்சி, நகராட்சிகளில் போதிய இடவசதி உள்ள மாநகராட்சி/நகராட்சிக்கு சொந்தமான இடங்கள் மற்றும் பூங்காக்களில் திறந்தவெளி உடற்பயிற்சிக் கூடம் மற்றும் யோகா மையம் அமைக்க நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

(கு.பி.பா)

II. இதன் தொடர்ச்சியாக மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் கண்டறியப்பட்டுள்ள போதிய இட வசதி உள்ள 147 மாநகராட்சி/நகராட்சிக்கு சொந்தமான பூங்காக்கள் மற்றும் திறவிடங்களில் திறந்தவெளி உடற்பயிற்சி கூடங்கள் மற்றும் யோகா மையங்களை பொது நிறுவனங்கள், தனியார் பங்களிப்பு மற்றும் உள்ளாட்சி பொது நிதியினை பயன்படுத்தி ஒரே மாதிரியாக ஏற்படுத்திடவும் தொடர் பராமரிப்பு செய்யும் வகையில் செயல்படுத்திட நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

III. மேற்காணும் யோகா மையம் மற்றும் உடற்பயிற்சி கூடங்களை அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் ஒரே மாதிரியாக அமைத்து செயல்படுத்தும் விதமாக யோகா மையக் கட்டிடத்திற்கான மாதிரி வடிவமைப்பு, வரைபடம் மற்றும் திறந்தவெளி உடற்பயிற்சி கூடங்களில் பொருத்தப்படும் உபகரணங்களின் தரம் மற்றும் விவரக் குறியீடு (Specifications) முதலானவை நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளரால் வழங்கப்படும்.

IV. 120 சதுர மீட்டர் பரப்பளவிற்கு குறைவில்லாத இடத்தில் யோகா மையக் கட்டிடங்கள் கட்டவும் 100 சதுர மீட்டர் பரப்பளவிற்கு குறைவில்லாத இடங்ளில் திறந்தவெளி உடற்பயிற்சி கூடங்கள் அமைக்கவும் நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

7. இவ்வாணை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் அலுவல் சார்பற்ற எண்.1225/S2/2020, நாள்.03.08.2020–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஹர்மந்தர் சிங்**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

**பெறுநர்**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை – 600 028.

**நகல்**

அனைத்து மாநகராட்சி/நகராட்சி ஆணையர்கள்,
(வழி நகராட்சி நிர்வாக ஆணையர்).
இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை இயக்குநரகம், சென்னை – 600 035.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
மாண்புமிகு அமைச்சர் (நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்பு திட்ட செயலாக்கம்)
அவர்களின் நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந–2/மாந–3/மாந–6/நநி–5/பேரூ–2) துறை,
சென்னை – 600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

**பிரிவு அலுவலர்**
3/9/2020.